interunido

# தமிழ்

## எங்கள் சேவைகள்

### டொச்மொழிப் படிப்புக்கள் > Deutschkurse

தீவிரமான டொச்மொழி படிப்புக்கள், வாரத்தில் ஓர்நாள் நடைபெறும் டொச்மொழி படிப்புக்கள் மற்றும் தாய்-சேய்க்கான படிப்புக்கள் «MuKi» (2,5 தொடக்கம் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் Kindergarten ஆயத்தப்படுத்தல்)

- தரங்களுக்கு ஏற்ப வகுப்புக்கள் நடைபெறும்
- பரீட்சைமூலம் தரம் பிரிககப்படும்
- பொதுஜன மானியம், அதனால் குறைந்த கட்டணம்

### ஆரம்ப முன்னேற்றம் > Frühförderung

பிறப்புமுதல் பாலர்பாடசாலை தொடக்கவயதுவரையுள்ள குழந்தைகளுக்கான ஆரம்ப முன்னேற்றத்திற்குரிய பலதரப்பட்ட திட்டங்கள்.
திட்டம் **schritt:weise:** தீவிரமான வீட்டிற்கு வருகை தரும் திட்டம் தாய் மற்றும் அவர்களின் 1 தொடக்கம் 4 வயதான குழந்தைகளுக்கு உரியது.

### கலாச்சாரங்களுக்கிடையிலான மொழிபெயர்ப்புக்கள் > Dolmetschen

வேற்றுமொழியாளர்களுடனான பேச்சுவார்த்தையின் போது
மொழி பெயர்ப்பதற்காக நாங்கள் பயிற்ச்சிபெற்ற மொழிபெயர்ப்பாளர்களை ஒழுங்குபடுத்திக் கொடுக்கின்றோம் (உதாரணமாக : அதிகாரிகளுடனான சிக்கலான பேச்சுவார்த்தைகள், ஆலோசனை நிலையங்கள், வைத்தியசாலைகள், ஆரோக்கியம் சார்பான நிலையங்கள் மற்றும் பாடசாலைப் பிரிவுகள், காவல்துறை, நீதிமன்றம் போன்றவை).

### இதர சேவைகள் > Andere Angebote

**femmesTISCHE:** சுவிஸ்நாட்டு வாழ்க்கைமுறை பற்றிய வேற்றுமொழியிலான கலந்துரையாடல்கள்
ஒருங்கிணைப்புத்திட்டங்கள்
மூத்த அங்கத்தவர்களுக்கான துணையுடன் கூடிய குழுக்கள்

### ஆலோசனைகள் > Beratung

அனைத்து ஆர்வமுள்ளவர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் தேவையான குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்பு சார்பான கேள்விகளுக்கான குறுகிய ஆலோசனைகள்
குடிவரவு நிறுவனம் **isa Bern** வழங்கும் ஆழமான ஆலோனைகள்

## interunido பற்றி...

**Langenthal;** மற்றும் **Oberaargau** பிராந்தியத்தில் இயங்கிவரும் ஒரு குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்பு சார்பான நிறுவனம் **interunido** ஆகும்

**interunido** மதம் மற்றும் அரசியல் சார்பற்றது.
இந்த சலுகைகள் இலாபம் கருதி அமைக்கப்பட்டவையல்ல.
இதற்கு ஆதரவு தரும் நிறுவனம் **Förderung der Bildung und Integration im Oberaargau (BIO)** என்றழைக்கப்படும் ஒபர்ஆர்காவ் பிராந்தியத்தில் இயங்கும் கல்வி மற்றும் ஒருங்கிணைப்பு மேம்பாட்டுச் சங்கம் ஆகும்.
இந்தச் சலுகைகள் பொருளாதார ரீதியாக பேர்ண் மாநிலத்தாலும், **Langenthal** நகராட்சியாலும், **Logis Suisse** மற்றும் வேறு நிறுவனங்களாலும் ஆதரவு வழங்கப்படுகின்றது.
இந்த கல்விச்சலுகைகள் தரமான முத்திரை EDUQUA என்னும் சான்றிதழ் பெற்றது.

interunido
thunstettenstrasse 40
4900 langenthal
tel 062 922 38 30 sek@winterunido.ch